**செ. கு. எண்:120** **நாள் :24.06.2014**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 24.6.2014

விழுப்புரம் மாவட்டம், எடைக்கல் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.முருகன் அவர்கள் 19.4.2014 அன்று உளுந்தூர்பேட்டை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கீழ்ப்பாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. B.நாராயணசாமி அவர்கள் 21.4.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்

பெரம்பலூர் மாவட்டம், கை.களத்தூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.சின்னசாமி அவர்கள் 18.4.2014 அன்று பாலக்கரை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 23.4.2014 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், திலகர் திடல் போக்குரத்துப் பிரிவு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.சௌந்திரபாண்டியன் அவர்கள் 25.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

விருதுநகர் மாவட்டம், வத்திராயிருப்பு காவல் நிலையத்தில், சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. விநாயகமூர்த்தி அவர்கள் 25.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், திரு.வி.க. நகர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. K.M.விநாயகம் அவர்கள் 25.4.2014 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், காட்பாடி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ஆனந்தன் அவர்கள் 27.4.2014 அன்று

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ஆரோக்கியசாமி அவர்கள் 27.4.2014 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், விஷ்ணுகாஞ்சி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. பரமசிவம் அவர்கள் 27.4.2014 அன்று கீழ்அம்பி கூட்டு சாலை அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.வேல்முருகன் அவர்கள் 30.4.2014 அன்று அய்யூர் அகரம் மேம்பாலம் அருகே தனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர் சின்னசாமி; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் நாராயணசாமி, சௌந்திரபாண்டியன், விநாயகமூர்த்தி, விநாயகம், ஆனந்தன், ஆரோக்கியசாமி, பரமசிவம், வேல்முருகன் தலைமைக் காவலர் முருகன்; ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**